# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஏப்பிறல் மாதம் 03 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 7.50**

## *2009 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (திருத்தச்) சட்டம்*

[*2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.-ஓ. 52/2008*

## *2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *(1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (iii) ஆம் உட்பந்தியில், "2005, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் வரிவிதிக்கப்படற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2005, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2009, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் வரிவிதிக் கப்படற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;*

*(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (v) ஆம் உட்பந்தியில் "(v) 2005, சனவரி 1 ஆம் தேதியன்று" என்னும் சொற்களிலிருந்தும் எண்களிலிருந்தும் தொடங்கி "(இதில் வரிப்பின்னம் 3/23 ஆகும்." என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் எண்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-*

"(v) (i) *2005 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு –*

2-PL 003783 -1,200 (2009/03)

(அ) சைபர் வீதப்படி வரிவிதிக்கப்படற் பாலதான பண்டங்கள் அல்லது சேவைகள் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்திற்கான நான்காம் அட்ட வணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பண்டங்கள் அல்லது சேவைகள் ,

தொடர்பில்தவிர, வழங்கப்பட்ட அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய பண்டங்களின் பெறுமதியின் மீது பதினைந்து சதவீதப்படி (நியம வீதம்) ; (இதில் வரிப்பின்னம் 3/23 ஆகும்) ;

(ii) 2009 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு -

(அ) சைபர் வீதப்படி வரிவிதிக்கப்படற்பால தான பண்டங்கள் அல்லது சேவைகள்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் நான்காம் அட்டவணை யில் குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள்,

தொடர்பில் தவிர, அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதியின்மீது பன்னிரெண்டு சதவீதப்படி (நியம வீதம்) (இதில் வரிப்பின்னம் 3/28 ஆகும்).".

(இ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருதனை இடுவதன் மூலமும் :-

"(ஈ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுக்கான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தினால்

*தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அங்கீகாரத்துடன் -*

(i) *இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட எவையேனும் பண்டங்களின் வழங்கலின் மீதும், ஏற்றுமதியாளர்களாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவுசெய்யப் பட்டுள்ள அத்தகைய உற்பத்தியாளர் களினால் இவ்வுட் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்கள் தவிர்ந்த பண்டங்களை உற்பத்தி செய்யும் நோக்கத்துக்காகப் பயன் படுத்துவதற்கென அத்தகைய வழங்குநரினால் எவரேனும் உற்பத்தியா ளருக்குச் செய்யப்படும் வழங்கலின்மீதும்; அல்லது*

(ii) *இந்நோக்கத்துக்காக அடையாளங் காணப் பட்ட சேவைகளின் வழங்கலொன்றாக 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் அங்கீகரிக்கப் பட்ட அத்தகைய வழங்குநர்களினால் வழங்கப்பட்ட சேவையொன்றாகவுள்ள தும், ஏற்றுமதியாளராக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவு செய்யப் பட்டுள்ளவரான ஏற்றுமதிக்காகப் பண்டங்களின் அத்தகைய உற்பத்தி யாளரினால் உற்பத்திசெய்யப்பட்ட எவையேனும் பண்டங்களின் தரம், இயல்பு அல்லது பெறுமதி என்பவற்றி லான சீராக்கத்தை விளைவிக்கின்றதும், எவரேனும் உற்பத்தியாளருக்கு வழங்கப் படுவதுமான ஏதேனும் சேவை அத்த கைய வழங்குநர்களினால் வழங்கப்படு தலின் மீதும்,*

அத்தகைய உற்பத்தியாளர்களின் அல்லது சேவை வழங்நர்களின் செயற்பாடுகள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுக்கான அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் கண்காணிக்கப்பட்டு, அத்தகைய செய்துமுடிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள், வழங்கல்களைப் பெற்றவரினால் உண்மையில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளனவென்று, ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்டவாறு காலாண்டு அடிப்படையில் அத்தகைய பண்டங்களின் கையுதிர்ப்பின்மீதான கணக்கிணக்கத்தை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை கொடுத்துதவும் வரையும் .".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "10. (1) இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு" என்னும் சொற்களிலிருந்தும் எண்களிலிருந்தும் "தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்:" என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களையும் எண்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"10. (1) (i) 2002, ஒகத்து 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2009, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும் –

(அ) விடயத்திற்கேற்ப, ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான ஒரு மாத அல்லது மூன்று மாத காலப்பகுதியின் முடிவில் அந்த வரிவிதிக்கப்படற்பாலதான விடயத்துக்

கேற்ப, ஒரு மாத அல்லது மூன்று மாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அவரது பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின் ; அல்லது

(ஆ) அப்போது முடிவடையும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அவரது வரிவிதிக்கப்படற்பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கலின் மொத்தப் பெறுமதி பதினெட்டு இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(இ) விடயத்திற்கேற்ப, அடுத்துவரும் ஒரு மாத அல்லது மூன்று மாத வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியொன்றில் அவரது வரிவிதிக்கப்படற்பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியத்தை அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் பதினெட்டு இலட்சம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியத்தைக் கொண்டிருக்குமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின்,

இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.”.

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ii) 2009, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்று கின்ற ஆள் ஒவ்வொருவரும் -

(அ) விடயத்திற்கேற்ப, ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான ஒரு மாத அல்லது மூன்று மாத காலப்பகுதியின் முடிவில் அந்த வரி விதிக்கப்படற் பாலதான விடயத்துக்கேற்ப, ஒரு மாத அல்லது மூன்ற மாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அவரது பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவை களினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஆறு இலட்சத்து ஜம்பதினாயிரம் ரூபாவை விஞ்சியிருப்பின் ; அல்லது

(ஆ) அப்போது முடிவடையும் பன்னி ரெண்டு மாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அவரது வரி விதிக்கப்படற்பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண் டங்களினதும் சேவைகளினதும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்கலின் மொத்தப் பெறுமதி இரண்டு மில்லியன் ஜந்து இலட்சம் ரூபாவை விஞ்சியிருப் பின் ; அல்லது

(இ) விடயத்திற்கேற்ப, அடுத்துவரும் ஒரு மாத அல்லது மூன்று மாத வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி யொன்றில் அவரது வரி விதிக்கப்படற்

பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஆறு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியத்தை அல்லது அடுத்து வரும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியத்தைக் கொண்டிருக்குமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின்,

இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கான நான்காம் காப்பு வாசகத்தில், "பதினைந்து சதவீதத்துக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பன்னிரெண்டு சதவீதத்துக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) ஐந்தாம் உட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், "பதிவு செய்யப்பட்ட ஆளினால் வங்கி உத்தரவாதமொன்று அல்லது காப்புறுதி முறியொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான பெறுமதிக்காகப் பதிவுசெய்யப்பட்ட ஆளினால் வங்கி உத்தரவாதமொன்று அல்லது காப்புறுதி முறியொன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (iv) ஆம் உட்பந்தியில், "(iv) விடயத்துக்கேற்ப, (iii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணப்பட்டியலின் அல்லது சுங்க வெளிப்படுத்துகையின் மீதான உள்ளீட்டுவரி," என்னும் சொற்களிலிருந்து "கழிக்கப்படவில்லையாயின் :" என்னும் சொல்வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(iv) (அ) (iii) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணப்பட்டியலின் மீதான உள்ளீட்டு வரி, ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான விபரத்திரட்டைப் பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் கொடுத்துதவுவதன்மூலம், அத்தகைய வரிப்பணப்பட்டியலின் தேதியிலிருந்து சொல்லப்பட்ட பன்னிரெண்டு மாதங்கள் முடிவுறுவதன் மேல் அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக வெளியீட்டு வரியிலிருந்து கழிக்கப்படவில்லையாயின் ; அல்லது

(ஆ) (iii) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சுங்க வெளிப்படுத்துகையின்மீதான உள்ளீட்டு வரி, ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான விபரத்திரட்டை இருபத்திநான்கு மாதகாலப்பகுதியினுள் கொடுத்துதவுவதன்மூலம், அத்தகைய சுங்க வெளிப்படுத்துகையின் தேதியிலிருந்து சொல்லப்பட்ட இருபத்திநான்கு மாதங்கள் முடிவுறுவதன் மேல் அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற அந்த வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக வெளியீட்டு வரியிலிருந்து கழிக்கப்பட்டவில்லையாயின் ; ".

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியில், "எவரேனும் ஆளினால் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் ஆளினால் ;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியில், "2008 சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளினால்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2008 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2009 சனவரி 1 ஆம் தேதிக்குமுன்னர், 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளினால் ; அத்துடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(3) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(iv) 2009 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற, 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டவொரு கூட்டுறவுச் சங்கம் தவிர்ந்த அல்லது 1951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, லோகோர் சீமாட்டிக் கடன் நிதியம் தவிர்ந்த எவரேனும் ஆளினால்,".

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஜ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஜ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அத்தகைய ஆளின் அல்லது பங்குடைமை யின் கூட்டுமொத்த மொத்தவிற்பனை வரவு எந்தக் காலாண்டில் ஆண்டொன்றுக்கு இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றதோ, அந்தக் காலாண்டின் முடிவுவரை, இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ, அதுவரை, அத்தகைய பதிவு செல்லு படியுடையதாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(i) அத்தகைய ஆளின் அல்லது பங்குடைமையின் கூட்டுமொத்த மொத்தவிற்பனை வரவு -

(அ) 2009 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு எந்தக் காலாண்டில் ஆண்டொன் றுக்கு இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றதோ ;

(ஆ) 2009 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கு கின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு எந்தக் காலாண்டில் ஆண்டொன்றுக்கு மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சு கின்றதோ ;

இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ அதுவரை, அத்தகைய பதிவு செல்லுபடியுடையதாதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், அதன் (i) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(i) அவரால் அல்லது அதனால் கொண்டு நடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டிலுமிருந்தான அவரது அல்லது அதன் கூட்டுமொத்த மொத்த விற்பனை வரவு-

(அ) 2009 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை அல்லது ஒரு காலாண்டுக்கு ஆறு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததாகவுள்ளதும் ; அத்துடன்

(ஆ) 2009 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு ஆண்டொன்றுக்கு மூன்று மில்லியன் ரூபாவை அல்லது ஒரு காலாண்டுக்கு ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததாகவுள்ளதும்,

ஆன எவரேனுமாளுக்கு அல்லது ஏதேனும் பங்குடைமைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் ; அத்துடன்".

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(1அ) முப்பத்திநான்காம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி, அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் செல்லுபடியான மேன்முறையீட்டை மீளாய்வுச் சபைக்கு ஆற்றுப்படுத்தலாமென்பதுடன், மீளாய்வுச் சபையானது அத்தகைய மேன்முறையீட்டைக் கேட்டுத் தீர்மானித்தலும் வேண்டும். 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**8.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை அதன் II ஆம் பாகத்தில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பாகத்தின் (அ) என்னும் பந்தியில் :-

(அ) விடயம் (xii)இல் "2008 திசெம்பர் 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2010 திசெம்பர் 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(ஆ) (xv) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(xvi) சுங்க நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்படும் இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரண இலக்கங்களின்கீழ் அடையாளங்காணப்பட்ட சூரிய சக்தி வலுவைப் பிறப்பிப்பதற்கான சூரிய பொட்டிப்பு கலங்கள் அல்லது வீட்டு சூரிய சக்தி முறைமை துணைப் பொருட்களும் (2009.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறுமாறு) ;

(xvii) சுங்க நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்படும் இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரண இலக்கங்களின்கீழ் அடையாளங்காணப்பட்ட உயர் தொழினுட்ப மருத்துவச் சாதனங்கள் அல்லது சீட்டு வழங்கும் எந்திரத் தொகுதியை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் எந்திரத் தொகுதி.

(2) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில் :-

*(அ)* (xxvi) *ஆம் விடயத்தில், "(2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ; அத்துடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "(2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;*

*(ஆ)* (xxvii) *ஆம் விடயத்தில், "(2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ; என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "(2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;*

*(இ)* (xxvii) *ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும் :-*

"(xxviii) *தேயிலைத் தொழிலுக்காகப் பயன் படுத்தப்படுவதும், தேயிலை எந்திரத் தொகுதியொன்றாக 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச் சபையினால் அடையாளங்காணப்பட்டதும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப் பட்டதுமான எந்திரத்தொகுதி (2008.10.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;*

(xxix) *அறுவை மருத்துவத்துக்காகப் பயன்படுத்தப்படுவதும், உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்டதுமான அறுவை மருத்துவஞ்சார் மென் துணி வலை (2009.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்).". அத்துடன்*

(xxx) *உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட நகைகள்.*

(3) அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியில் :-

(அ) (xxiii) ஆம் விடயத்தில், "அல்லது குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) (xxiii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(xxiv) பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக அழிக்கப்பட்ட ஏதேனும் பஸ்வண்டியை மாற்றீடு செய்வதற்கு அதன் சொந்தக்காரரினால், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் அல்லது ஏதேனும் மாகாண வீதிப் பயணிப் போக்குவரத்து அதிகார சபையினது அங்கீகாரத்துடனான ஏதேனும் பஸ்வண்டி (2008.07.09 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;

(xxv) கிராமியக் கைத்தொழில்கள் மற்றும் சுய ஊழிய மேம்படுத்துகை அமைச்சின் அங்கீகாரத்துடன் தேசியக் கைப்பணிப் பேரவையினால் பித்தளைப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பித்தளைத் தகடுகள், பித்தளை வார்ப்புக் கட்டிகள், நூல், சாயங்கள், வெண்மெழுகு அல்லது அரக்கு (2009.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;

(xxvi) மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்காக இலங்கை மின்சாரச் சபைக்கு வழங்கப்படுவதற்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இரசாயன நப்தா (2009.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;

(xxvii) இலங்கையில் உற்பத்திசெய்யப் பட்டவையும், அத்தகைய மருந்தாக் கங்களின் உற்பத்தியாளரினால் இறக்குமதிசெய்யப்பட்டவையும், அத்துடன் சுகாதாரக் கவனிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சுக்கான செயலாளரின் விதப்புரையின்மேல் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவையுமான மருந் தாக்கங்களைப் பொதியிடுவதற்குப் புறநீங்கலாகப் பயன்படுத்துவதற்கான பொதியிடும் பொருட்கள், இலங்கை யில் அத்தகைய பொதியிடும் பொருட்கள் உற்பத்திசெய்யப்படாத வரையும்.

(xxviii) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத் தவிசாளரின் அங்கீகாரத்துடன் சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப் பட்ட உணவுப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் முறைமை இலக்கங்களின் கீழ் அடையாளங் காணப்படும், வெளிக்காட்டப்பட்ட அல்லது உருவிளக்கப்படுத்தப்பட்ட சினே திரைப்படங்களும், காந்த சினே ஒலிப்பதிவுக் கருவிகளும், திரைப்படம் சார் படம்பிடிக்கும் கருவிகளும், படங் காட்டு கருவிகளும், பாகங்களும் துணைப்பொருட்களும், திரைப்படம் சார் ஆய்வுகூடங்களுக்கான உபகர ணங்களும் சாதனங்களும், மின்சார மின்னிழைகளும் அல்லது மின்வெளி யேற்று விளக்குகளும் வில் விளக்குக் கார்பனும்.".

(4) அப்பாகத்தின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(எ) சமுதாயத்தினரது பங்குபற்றுகையின்மூலம் நிறைவேற்றப்படுவனவும், நாட்டைக் கட்டியெழுப்புதல், மற்றும் அரச உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்தி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டனவும், கம நகும, மக நகும, சமுர்த்திக் கருத்திட்டங்களுக்கான நிர்மாணச் சேவைகளாகவுள்ளனவுமான சேவைகளை வழங்குதல் (2009.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறுமாறு) ;

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையானது, "மூன்றாம் அட்டவணை" என்ற தலையங்கத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"2009, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக".

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**10**. (அ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக 2008, யூன் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவெனக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தின் பிரிவு 4(1), (2) மற்றும் (3) என்பவற்றினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக 2009 சனவரி 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 2009, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.".

*நட்டோத்தரவாதம்.*

**11.** இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்குகின்றதும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகச் சேர்பெறுமதி வரியைச் சேகரிக்கும் எவரேனுமாள் உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேகரிப்பானது, எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுகின்றதாகவும் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஆளுக்கு, அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்